www.LearnEngineering.in

# தமிழர் மரபு Heritage of Tamils

## அலகு 1: UNIT 1

## மொழி மற்றும் இலக்கியம் Language&Literature

### இந்திய மொழிக் குடும்பங்கள்:

133 கோடிக்கும் மேலான மக்கள் வாழ்கின்ற இந்தியத் திருநாட்டில் சுமார் 500 மொழிகள் மட்டுமே பேசப்படுவதாக மொழி வாரி மக்களின் கணக்கீட்டு மையம் (People'sLinguistic Survey of India-PLIS) தெரிவிக்கிறது.

இந்திய மொழிகளின் மூலங்களை அடிப்படையாகக் கொண்டு அவை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.. அவை

1. இந்தோ ஆரிய மொழிக் குடும்பம்
2. திராவிட மொழிக் குடும்பம்
3. ஆஸ்ட்ரோ ஆசிய மொழிக் குடும்பம்
4. திபெத்திய பர்மன் மொழிக் குடும்பம்

www.LearnEngineering.in

# இந்தோ ஆரிய மொழிக் குடும்பம்:

1. இது இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் ஒரு பகுதியாகும்.

2. இம் மொழிக் குடும்பத்தின் முதல் மொழி சமஸ்கிருதம்.

3. ரிக் வேதம் இம் மொழியில் எழுதப்பட்ட முதல் இலக்கியமாகும்.

4. வேத கால சமஸ்கிருதம் இலக்கிய மொழியாக உருவெடுத்தபின் பாலி, பிராகிருதம், அப்பபிரம்ஷா மொழிகள் உருவாகின.

5. நவீன மொழிகளாக இந்தி, உருது, பெங்காலி, பஞ்சாபி, குஜராத்தி, அஸ்ஸாமி, ஒரியா, மராத்தி, காஷ்மீரி, கொங்கனி, நேபாளி, சிந்தி, முதலிய மொழிகள் அப்பபிரம்ஷாவிலிருந்து தோன்றியன.

www.LearnEngineering.in

# திராவிட மொழிக் குடும்பம்:

1. திராவிட மொழிக் குடும்பத்தில் 23 மொழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

2. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கொடகு ஆகியன திருந்திய மொழிகளாகவும் தோடா, கோண்டு, கூ, கோடா, ராஜ்மகால், ஒரோவான் ஆகியன திருந்தாத மொழிகளாகவும் திராவிட மொழிகளை ஆராய்ந்த அறிஞர் கால்டுவெல் சுட்டியுள்ளார்.

3. தமிழ் உலகத்தில் தோன்றிய பழமையான மொழிகளுள் ஒன்று. சுமார் எட்டு கோடிக்கும் மேற்பட்டோர் தமிழ் மொழியைப் பேசுவதாகச் சுட்டுகின்றனர்.

4. ஆந்திரா, தெலுங்கானாச் சேர்ந்ததான தெலுங்கு மொழியைச் சுமார் எட்டு கோடிக்கும் மேற்பட்டோர் பேசுவதாகச் சுட்டியுள்ளனர்.

5. கர்நாடகத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் கன்னட மொழியைச் சுமார் 5 கோடி மக்கள் பேசுவதாகச் சுட்டுகின்றனர்.

www.LearnEngineering.in

6. கேரள நிலத்தின் மொழியான மலையாளத்தைச் சுமார் 5 கோடி மக்கள பேசுவதாகக் கூறுவர்.

7. திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடு திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என்றும் நில அமைப்பைக் கொண்டு பிரிப்பர்.

8. திராவிட மொழிகள் ஒட்டு நிலை மொழிகள் (AGGLUTINATIVE Languages) என்றும் இவற்றுள் பல நிலைகளில் பொதுமைத் தன்மை தென்படுகிறது என்றும் சான்றுகாட்டிச் சுட்டியுள்ளனர்.

9. தமிழில் கண் என்பதனைக் கன்னடம்,
மலையாளத்தில் கண்ணு என்றும்
தோடாவில் கொண் என்றும்
தெலுங்கு, கொடகில் கன்னு என்றும்
பர்ஜியில் கெண் என்றும் குறிப்பர்.

இதனைப் போன்ற ஒப்புமையை எண்ணுப் பெயர்களில் பெரும்பான்மையாகக் காணலாம்.

## ஆஸ்டிரிக் ஆசிய மொழிக் குடும்பம்:

கிழக்கு இந்தியப் பகுதிகளிலும் நடு இந்தியப் பகுதிகளிலும் முண்டா / கோல் மொழிகள் வழக்கிலுள்ளன.

தேயிலைத் தோட்டங்களில் பணி புரியும் முண்டாரி, சந்தாலி மொழிகளைப் பேசுவோர் நடு இந்தியப் பகுதிக்கு இம் மொழிகளைக் கொண்டு சென்று இருப்பர்

ஹூ, சவாரா, கோர்க், ஜுவங், காசி, நிகோபார்ஸ் ஆகிய மொழிகள் இக் குடும்ப மொழிகளாக வளர்ந்துள்ளன.

## திபெத்திய பர்மன் மொழிக் குடும்பம:

இக் குடும்பத்தில் போடா, மணிபுரி, லுஷைதா, கரோ, பூட்டிமா, நெவாரி, லெட்சா, அஸ்மாகா, மிக்கிர் முதலிய மொழிகள் பேசப்படுகின்றன. இந்திய வடக்கு, கிழக்கு எல்லைப் பகுதிகளில் இவை வழக்கிலுள்ளன.

# செம்மொழி: Classical Language:

www.LearnEngineering.in

பொது நிலையில் இலக்கியப் படைப்புகள் மற்றும் கலைப் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டே செம்மொழி என்பது தீர்மானிக்கப்படுகிறது.

ஒரு மொழி செம்மொழி என அழைக்கப்பட வேண்டுமாயின் அம்மொழி தொன்மைச் சிறப்பு வாய்ந்ததாக அதற்கென ஒரு தனித்த பண்பாடு உடையதாக அந்தப் பண்பாடு எதனோடும் தொடர்பற்றதாக வளமையான இலக்கியச் செழுமை வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்றார் ஜார்ஜ்ஹர்ட். உலகச் செம்மொழிகளான கிரேக்கம், இலத்தீன், அரபி, சமஸ்கிருதம், சீனம் ஆகியவற்றுடன் தமிழும் செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழின் தொன்மைச் சிறப்பு, மரபு, பண்பாடு சிதையாமல் காக்கப்பட்டு வந்துள்ளது. மேலும் 1. தொன்மை 2. தனித்தன்மை 3.நடுவுநிலைமை 4. பொதுமைப்பண்பு 5. தாய்மைப்பண்பு 6. பண்பாட்டுக் கலை அறிவு வெளிப்பாடு 7. பிறமொழித் தாக்கமின்மை 8. இலக்கிய வளம் 9. உயர் சிந்தனை 10. கலை இலக்கியத் தனித்தன்மை 11. மொழிக் கோட்பாடு என்ற பதினோரு கூறுகளை தகுதிகளாகப் பெற்ற வாழும் மொழியாக உள்ளது. எனவே உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழி என உறுதிபடக் கூறினர்.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

வேறெந்த மொழிச் சாயலுமின்றி பழமையான மொழியாக மூத்த மொழியாகப் பிறந்து வளர்ந்து வருவது என்றதோடு தமிழின் தனித்தியங்கும் தன்மையை ஆதாரங்களுடன் வெளியிட்டவர் கால்டுவெல் ஆவார்.

தமிழின் செம்மொழித்தன்மையை உலகிற்கு எடுத்துணர்த்தியவர் கலிபோர்னியாவில் வாழும் பேராசிரியர் ஜார்ஜ்ஹர்ட் ஆவார். கீழ்க்கண்ட நான்கு கருத்துகளை ஆதாரங்களுடன் நிறுவி இதனை உறுதி செய்துள்ளார்.

1. பழமைச் சிறப்பு வாய்ந்தது
2. தனக்கெனத் தனித்த இலக்கிய மரபினை உடையது
3. தமிழின் செவ்விலக்கியங்கள் மற்ற செம்மொழிகளின் இலக்கியங்களோடு ஒப்பு நோககத் தக்கவை.
4. இந்தியப் பண்பாடு, மரபுகளின் தனித்துவம் உடையதாகச் செவ்விலக்கியங்கள் விளங்குகின்றன.

www.LearnEngineering.in

**தமிழின் செவ்வியல் நூல்கள்**: உயர் தனிச் செம்மொழி என்று உறுதி செய்வதற்குத் துணையாய் இருந்த மிகப் பழமையான தமிழ் நூல்களாவன.

www.LearnEngineering.in

1. தொல்காப்பியம் (மிகப் பழமையான **இலக்கண** நூல்)

**எட்டுத்தொகை நூல்கள் (8)**

2. நற்றிணை 3.குறுந்தொகை 4.ஐங்குறுநூறு 5.பதிற்றுப்பத்து 6.பரிபாடல்
7. கலித்தொகை 8.அகநானூறு 9.புறநானூறு

**பத்துப்பாட்டு நூல்கள் (10)**

10.திருமுருகாற்றுப்படை 11.பொருநராற்றுப்படை 12..சிறுபாணாற்றுப்படை
13.பெரும்பாணாற்றுப்படை 14.முல்லைப்பாட்டு 15.மதுரைக்காஞ்சி
16..நெடுநல்வாடை 17.குறிஞ்சிப்பாட்டு 18.பட்டினப்பாலை 19.மலைபடுகடாம்

**பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்(18)**

20. நாலடியார் 21.நான்மணிக்கடிகை 22.இன்னா நாற்பது 23.இனியவை நாற்பது
24. கார் நாற்பது 25. களவழி நாற்பது 26.ஐந்திணை ஐம்பது
27.ஐந்திணை எழுபது 28.திணைமொழி ஐம்பது 29.திணைமாலை நூற்றைம்பது
30.பழமொழி 31.சிறுபஞ்சமூலம் 32.திருக்குறள் 33.திரிகடுகம்
34.ஆசாரக்கோவை 35.முதுமொழிக்காஞ்சி 36.ஏலாதி 37.கைந்நிலை
**38.**சிலப்பதிகாரம் **39.**மணிமேகலை **40.**முத்தொள்ளாயிரம் **41**. இறையனார் களவியல்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

## சங்க இலக்கியத்தின் சமயச் சார்பற்ற தன்மை::

ஐந்திணைகளையும் அவற்றுக்கான தெய்வங்களையும் தொல்காப்பியம் சுட்டியது. சங்க இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட சமயத்தையோ தெய்வத்தையோ மட்டும் சுட்டவில்லை.

இயற்கை வழிபாடு, சிறு தெய்வங்கள், பெருந்தெய்வங்கள், ஆலயங்கள், காவல் தெய்வங்கள் என அனைத்தையும் சுட்டியுள்ளன. ஆதனைப் போன்றே ஒரு குறிப்பிட் வழிபாட்டு முறையை மட்டும் சுட்டவில்லை. இவையே சமயப் பொதுமைக்கான அடிப்படை எனலாம்.

செய்யும் வினைகளுக்குத் தகுந்த வினைப் பயனாக  உயிருக்கு உடம்பும் நுகர் பொருட்களான பலன்களும் அமைகின்றன. அத்தகைய உடம்பையும், நுகர் பொருட்களையும் அவற்றின் நிலைக்களனாக இவ்வுலகத்தையும் படைத்து அளிக்கும் கருணையைச் செய்வதே முதற்பொருளாகிய இறைவனின் தன்மையாகும்.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# சங்க இலக்கியத்தில் பகிர்தல் அறம்::

மனிதனின் நடத்தையைப் பற்றிய ஆய்வைத் தனக்குரிய பணியாக அமைத்துக் கொண்ட பிரிவுக்கு அறவியல்(Ethic)என்று பெயர்.

ஒரு மனிதன் தனக்குத் தானே தலைவனாவதற்கு உருவாக்கிய நெறிமுறைகள், கொள்கைகள் ஆகியவற்றின் தொகுப்பே அறம் எனப்படுகிறது.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்',
'அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்' , 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்றும் விளக்கமளித்தார் வள்ளுவர்.

அறம் என்பதனைச் சங்க காலத் தமிழர்கள் வாழ்க்கை நெறியாகவே கருதினர்.

சங்க கால மக்கள் கண்ட வாழ்க்கை நெறியாகிய அறம் பழக்க வழக்கங்களாலும், நீதியாலும், கடமையுணர்வர்லும், ஒழுக்கத்தாலும், ஈகையாலும், கொடையாலும் வளர்ச்சியடைந்து பரந்துள்ளதை அறிய முடிகிறது.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

## திருக்குறளில் மேலாண்மைக் கருத்துகள:

மேலாண்மை என்பதற்கு ஓர் அமைப்பு, துறை, நிறுவனம் முதலியவற்றில் கட்டுப்படுத்துதல், கண்காணித்தல், பராமரித்தல் போன்றவற்றை உள்ளடக்கிய செயல்பாடு எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

**திட்டமிடல்:** எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு

**ஒழுங்கமைவு**: படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

**பணிமேம்பாடு**: வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

www.LearnEngineering.in

# தமிழ்க் காப்பியங்கள்:

## ஐம்பெருங்காப்பியங்கள்:

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவகசிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

## ஐஞ்சிறு காப்பியங்கள்:

1. உதயண குமார காவியம்
2. நாககுமார காவியம்
3. யசோதர காவியம்
4. நீலகேசி
5. சூளாமணி

## இக்காலக் காப்பியங்கள்:

சிறு காப்பியம், சிறு காவியம், குறுங்காப்பியம், எனப் பல தோன்றின. பாஞ்சாலி சபதம், இயேசு காவியம், இராவண காவியம் முதலியன.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

**தமிழகத்தில் சமண பௌத்த சமயங்களின் தாக்கம்:** தமிழகத்தில் செல்வாக்கு பெற்ற சமயங்களுள் ஒன்றான சமணம் திகழ்ந்துள்ளது. சமணப் பள்ளிகள், குகைகள், ஓவியங்கள், கல்வெட்டுகள் முதலியன இதற்குச் சான்றாகின. தமிழ் இலக்கியத்திற்குச் சமணர்கள் ஆற்றிய தொண்டு அளப்பரியது. சீவகசிந்தாமணி, நாலடியார், உதயணகுமார காவியம், சூளாமணி, நாககுமார காவியம், நீலகேசி, யசோதர காவியம், ஆகியன சமணர்களது படைப்புகள் ஆகும். மேலும் சிலப்பதிகாரத்தில் சமணத்தின் தாக்கம் உள்ளது என்பர், பல நூல்களில் ஆங்காங்கே சமணக் கருத்துகள் தென்படுகின்றன.

தமிழகத்தில் பௌத்த மதம் சிறப்புற்றிருந்துள்ளது. கி.பி பத்தாம் நூற்றாண்டு வரையில் பௌத்தம் தமிழகத்தில் சிறப்புற்றிருந்தது என்பர். மணிமேகலை முழுதும் பௌத்தத்தைப் பற்றியே பேசியது. நாகப்பட்டினம், காஞ்சிபுரம் முதலியன இவர்களது இருப்பிற்குச் சான்று பகர்கின்றன. மணிமேகலை என்ற பெருங்காப்பியமும் குண்டலகேசி என்ற சிறு காப்பியமும் வீரசோழியம் என்ற இலக்கண நூலும் பௌத்தத்தைச் சார்ந்தவை.

ஆசையே அனைத்து துன்பங்களுக்கும் காரணம் எட்டு நெறிகள் துன்பத்தைப் போக்கி உய்வு பெறச் செய்வன ஆகியன நிலைத்த உண்மைகள். சமணம் பௌத்தம் இரண்டுமே துறவை வலியுறுத்தின.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# பக்தி இலக்கியங்கள:

சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்று வரை பக்தி இலக்கியங்கள் தோன்றி தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளன.

**சைவம்:**

**திருமுறைகள்**::

1,2,3 திருமுறைகள்- தேவாரம்- திருஞானசம்பந்தர்-1459,1331,1358

4,5,6 திருமுறைகள்- தேவாரம்- திருநாவுக்கரசர-1070,1015,981331

7 திருமுறை - தேவாரம்- சுந்தரர்-1026

8 திருமுறை - திருவாசகம், திருக்கோவையார் - மாணிக்கவாசகர்-1058

9 திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு – திருமாளிகைத் தேவர், சேந்தனார் உள்ளிட்ட ஒன்பதின்மர்-301

10. திருமுறை - திருமந்திரம் - திருமூலர்-3000

11. திருமுறை - பதிகம், மாலை, அந்தாதி, கோவை – காரைக்காலம்மையார், சேரமான்பெருமாள், நம்பியாண்டார் உள்ளிட்ட பன்னிருவர்-1385

12. திருமுறை - பெரியபுராணம்(திருத்தொண்டர்புராணம்)-சேக்கிழார்-4286

www.LearnEngineering.in

# வைணவம்:
www.LearnEngineering.in

## திவ்ய பிரபந்தம்

1.பொய்கையாழ்வார் -- முதல் திருவந்தாதி

2.பூதத்தாழ்வார் -- இரண்டாம் திருவந்தாதி

3.பேயாழ்வார் --மூன்றாம் திருவந்தாதி

4.திருமழிசையாழ்வார் -- திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி

5.நம்மாழ்வார் --திருவிருத்தம்,திருவாசிரியம்,பெரியதிருவந்தாதி,திருவாய்மொழி

6.மதுரகவியாழ்வார் --கண்ணிநுண் சிறுத்தாம்பு

7.குலசேகராழ்வார் --பெருமாள் திருமொழி

8.பெரியாழ்வார் – திருப்பல்லாண்டு

9.ஆண்டாள் -- திருப்பாவை

10.திருப்பாணாழ்வார் -- அமலனாதிபிரான்

11.தொண்டரடிப்பொடியாழ்வார் -- திருமாலை

12.திருமங்கையாழ்வார் -- பெரியதிருமொழி, குறுந்தாண்டகம், நெடுந்தாண்டகம், சிறிய,பெரிய திருமடல்

www.LearnEngineering.in

## பேரிலக்கியமும் சிற்றிலக்கியமும் www.LearnEngineering.in

சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பெருங்கதை, வளையாபதி, குண்டலகேசி என்பன பெருங்காப்பியங்கள். உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி என்பன சிறுகாப்பியங்கள்..

இவை போன்ற இலக்கியங்களைப் பேரிலக்கியம் என அழைப்பது மரபு..

.தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், பரணி முதலியவற்றைச் சிற்றிலக்கியம் என்பர், பேரிலக்கியத்திற்கும் சிற்றிலக்கியத்திற்கும் இடையே வேறுபாடுகள் உள.

| | | |
|---|---|---|
| 1 | பாடல் எண்ணிக்கை அடி எண்ணிக்கை அதிகம் | பாடல் எண்ணிக்கை, அடி எண்ணிக்கை குறைவு |
| 2 | அகப்பொருளிலோ,புறப்பொருளிலோ பல துறைகளை உள்ளடக்கியது | ஏதேனும் ஒரு துறையை மட்டுமே கூறும். |
| 3 | தலைவனின் முழு வாழ்க்கையையும் விளக்கும் | தலைவனின் வாழ்க்கையின் ஒரு பகுதியை மட்டுமே கூறும் |
| 4 | அறம,பொருள் இன்பம் வீடு கூறும் | ஏதேனும் ஒன்றனை மட்டுமே கூறும் |

www.LearnEngineering.in

**சிற்றிலக்கியம்- விளக்கம்:**

சிற்றிலக்கியங்களை முதலில் பிரபந்தங்கள் என்று வழங்கினர். பிரபந்தம் என்ற வடசொல்லுக்கு நன்கு வடிவமைக்கப்பட்டது என்பது பொருள். இது அனைத்து இலக்கியங்களுக்கும் பொதுவானதே. ஆகவே காலப்போக்கில் சிற்றிலக்கியம் என்ற சொல்லே இவ்வகை இலக்கிங்களைக் குறிக்க நிலைபெற்றது.

.

**சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை:**

சிற்றிலக்கியம் என்னும் வகைமை பல இலக்கிய வகைகளை உள்ளடக்கியது. சிற்றிலக்கியம் என்பதனுள் 96 வகையான இலக்கியங்கள் காணப்படுகின்றன என்பர். கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல் என்ற பாட்டியல் நூல்தான் 96 வகை எனக் கூறியது.

.

1. சிற்றிலக்கியம் அளவில் சுருங்கியதாக அமைவது(பாடல், அடி எண்ணிக்கை)
2. பெரும்பாலும் ஒரு துறை பற்றியதாகவே அமையும்.
3. கடவுள் மன்னன், வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும்.(உலா-தலைவன் உலாவரும் காட்சி மட்டுமே சிறப்பித்தது
4. அறம்,பொருள்,இன்பம்,வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது.
5. இவ்வகையுள் கலம்பகம், உலா, தூது, பரணி, கோவை, பிள்ளைத்தமிழ், சதகம், முதலியன அடங்கும்.

www.LearnEngineering.in

| | |
|---|---|
| கலம்பகம்: | மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம் |
| பிள்ளைத்தமிழ்: | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் |
| தூது: | தமிழ் விடு தூது, மயில் விடு தூது |
| கோவை: | அம்பிகாபதிக்கோவை, தஞ்சைவாணன்கோவை |
| பரணி: | கலிங்கத்துப்பரணி, தக்கையாகப்பரணி |
| உலா: | மூவருலா, குலோத்துங்க சோழனுலா |
| அந்தாதி: | அபிராமி அந்தாதி |
| பள்ளு | முக்கூடற்பள்ளு |
| குறவஞ்சி | திருக்குற்றாலக் குறவஞ்சி |

www.LearnEngineering.in
www.LearnEngineering.in
www.LearnEngineering.in

www.LearnEngineering.in

## நவீன இலக்கியம்:

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நவீன இலக்கியம் பற்றிய சிந்தனை தமிழில் தோன்றத் தொடங்கியது.

அச்சுத் தொழில்நுட்பம், உரைநடை முதலியனவற்றின் அறிமுகமே இவ்வகை இலக்கிய வரவிற்கு அடிகோலியது.

Modern Literature என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாகப் பயன்பாட்டிற்கு வந்த சொல் இது.

நவீன இலக்கியம் மக்களை நோக்கிப் பேசுகிறது.

நவீன இலக்கியம் ஜனநாயக காலகட்டத்தைச் சேர்ந்தது. கடவுளையும் அரசனையும் வள்ளலையும் என உயர்ந்தோரை மட்டுமே பேசிய, பாடிய இலக்கியங்கள் பேசாதவர்களைப் பற்றிப் பேசத் தொடங்கியது. இதுவே நவீன இலக்கியத்தின் வரவேற்புக்கான காரணம் எனலாம்.

.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

பழைய இலக்கியம் நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தைச் சார்ந்தது. இவை மாறாத மதிப்பீடுகளை முன்வைக்கிறது..

தமிழில் மரபுக்கவிதைகளாக இருந்த இலக்கிய வடிவிற்கு மாற்றமளித்தது நவீன இலக்கிய வருகையே.

இதனால் உரைநடை, வசன கவிதை, புதுக்கவிதை, , சிறுகதை, கட்டுரை, புதினம்(நாவல்) என இலக்கிய வகைகள் தமிழில் பெருகின

அச்சு இயந்திரங்களின் வருகையால் ஏடுகளில் ஓலைச் சுவடிகளில் இருந்த தமிழ் இலக்கியங்கள் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர், ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை போன்றோரின் அயராத உழைப்பினால் அச்சுகளில் வெளிவந்தது.

நவீன இலக்கிய காலகட்டம் மூன்று இயக்கங்களால் ஆனது.

**1. மீட்பியக்கம் 2. இதழியல் 3. புனைவெழுத்து**

**முன்னோடிகள்:** மாயூரம் வேதநாயகம்பிள்ளை, ராஜம்ஐயர், அ.மாதவையா, சுப்பிரமணியபாரதி முதலியோர்.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

**தமிழிலக்கிய வளர்ச்சியில் பாரதியார்:**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நடை பல துறைகளில் விரிந்து பயன்படுவதற்கு வழி காட்டியவர் மகாகவி. அரசியல், பொருளாதாரம், கல்வி, அறிவியல், சீர்திருத்தம், சமூகவியல் முதலிய மக்களின் அன்றாடப் பயன்பாட்டில் உள்ள பல துறைகளிலும் தமிழ் உரைநடையிள் செல்வாக்கை பரவச் செய்தார்.

பெருங்கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி, விடுதலை உணர்வை பாமரனுக்கும் கொண்டு சேர்த்தவர், சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு எனப் பல மொழிகளில் புலமை பெற்றவர். 1912 ஆம் ஆண்டு கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தார். கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம், புதியஆத்திச்சூடி உள்ளிட்ட பல காவியங்களைப் படைத்தார். சுதந்திரப் போராட்ட உணர்வைத் தூண்டும் எண்ணற்ற பாடல்களை, தமிழ் மொழி, தமிழ்நாடு, பாரத தேசம் என மொழி, தேசபக்திப் பாடல்களையும் இயற்றினார். பாட்டுக்கொரு புலவன் என்றும் மகாகவி என்றும் மக்கள் கவி என்றும் மானுடம் பாடவந்த மாகவி என்றும் முண்டாசுக் கவிஞன் என்றும் போற்றப்படுகிறார்.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

**தமிழிலக்கிய வளர்ச்சியில் பாரதிதாசன்:**

தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி, திரைக்கதை ஆசிரியர், எழுத்தாளர் எனப் பல்வேறு துறைகளில் முத்திரையைப் பதித்தவர். புரட்சிக் கவிஞர், பாவேந்தர் என்று புகழப்பட்டவர்.

பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், குறிஞ்சித் திட்டு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, பிசிராந்தையார், பெண்விடுதலை உள்ளிட்ட எண்ணற்ற நூல்களைப் படைத்தார்.

பாரதியாரின் மீது அளவற்ற பக்தியும் காதலும் கொண்டவர், அவரை மானசீக குருவாக ஏற்றார். தனது இயற்பெயரான கனகசுப்புரத்தினம் என்பதைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

சாதி மறுப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு, கடவுளர் எதிர்ப்பு எனப் பல சீர்திருத்தக் கருத்துக்களை மக்கள் மனதில் பதியச் செய்தார். 1954 ஆம் ஆண்டில் புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினரானார்.

தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்றும் தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்றும் உணர்ச்சி பொங்கப் பாடியவர்.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# அலகு 2

- மரபு – பாறை ஓவியங்கள் முதல் நவீன ஓவியங்கள் வரை – சிற்பக்கலை

www.LearnEngineering.in

# நடுகல்

www.LearnEngineering.in

- நடுகல் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக் கல் ஆகும். இவற்றை வீரக் கற்கள் என்றும் கூறுவர். உலகின் பல பகுதிகளிலும் பெருங்கற்காலம் முதலே இவ்வழக்கம் இருந்துள்ளது. இறந்தவர்கள் எவருக்குமே நடுகற்கள் எடுக்கப்படலாம் எனினும் வீரச்சாவு அடைந்தவர்களுடைய நடுகற்களுக்கே பெருமதிப்பு கொடுக்கப்பட்டது. வீரர்களுக்காக எடுக்கப்படும் நினைவுக் கற்களை மக்கள் வணங்கி வந்தமையைப் பண்டைய இலக்கியங்கள் போற்றியுள்ளன. தமிழகத்தில் நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்ததனைச் சங்க நூல்கள் தொடங்கிப் பலவும் உணர்த்தியுள்ளன. சேங்கம், தருமபுரி, தென்களிக் கோட்டை ஆகிய ஊர்களை அடுத்து பகுதிகளில் இவை பெருமளவில் காணப்படுகின்றன. அதியமான் காலத்து நடுகற்கள் இவை. சேர, சோழ, பாண்டியர் காலங்களிலும் இவை வழக்கிலிருந்துள்ளன

www.LearnEngineering.in

www.LearnEngineering.in




www.LearnEngineering.in

www.LearnEngineering.in



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# பாறை ஓவியங்களும் சிற்பங்களும்




www.LearnEngineering.in

www.LearnEngineering.in



www.LearnEngineering.in

www.LearnEngineering.in





கிருஷ்ணகிரி அருகே தர்மராஜா நகரில் உள்ள 2 ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தவளை வாய் பாறை. கீழ் படம்: பாறையில் காணப்படும் பழங்கால ஓவியங்கள்.

www.dinakaran.com


www.LearnEngineering.in

www.LearnEngineering.in



www.LearnEngineering.in

www.LearnEngineering.in



- யானையும் காளையும் இணைந்த விசித்திரமான சிற்பம். இரண்டுமே உருவத்திலும் உயரத்திலும் வேறுபட்டவை. ஆனால் வலிமையில் தனிப்பட்ட திறன் கொண்டவை. ஒரே தலையில் இரண்டையும் இணைத்த சிற்பியின் கற்பனைத் திறனைக் காணுங்கள்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

- யானை தனது கால்களைத் தூக்கி காளையை முன்னோக்கித் தள்ளப் பார்க்கிறது. யானைக்குக் கோபம் வந்தால் தன் வ்ாலை மேலே தூக்கியபடி ஓடும் என்பதையும், காளை தன் பின்னங்கால்களை நன்றாக உதைத்துக் கொண்டு முன்னோக்கி நகரும் என்பதைச் சிற்பி கச்சிதமாக வெளிப்படுத்தியுள்ளார். யானை, காளைகளின் கால்களில் சிம்மத்தை வடித்து இது சோழர்களின் கலைப் பொக்கிஷம் என்பதை உணர்த்தியிருக்கின்றார் சிற்பி. இது கி.பி.1178ல் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்ட திருபுவனம் கம்பகரேஸ்வரர் கோயிலில் உள்ளது.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

- **பாறை ஓவியம்** (Rock Art) பாறைச் செதுக்கல்கள்(Petroglyph)

முற்கால மனிதர்களால் செதுக்கிச் செய்யப்பட்ட/வரையப்பட்ட வரி வடிவ ஓவியத்தைக் குறிக்கும். முதன் முதலாக உலகில் பாறை ஓவியமானது ஸ்பெயின் நாட்டின் அல்டமிரா என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. துமிழகத்தில் மல்லபாடி என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

பழங்காலத்தில் மக்கள் குகைகளில் வாழ்ந்துள்ளனர். துூங்கள் வாழ்ந்த குகைகளில் ஓவியங்களை வரைந்த நிலையில் அருகே இருந்த பாறைகளிலும் ஓவியங்களை வரைந்துள்ளனர். குகைகள் இருட்டாக இருந்ததால் பாறைகளில் வரைவதை விரும்பினர். எனவே இவை குகை ஓவியங்கள் என்பதைவிடப் பாறை ஓவியங்கள் என்றே வழங்கலாயின.

**சிற்பங்கள்:** சுடுமண், உலோகம் ஆகியன கொண்டு சிற்பங்கள் உருவாக்கப்பட்டன. பின்னர் கண்ணாடி, தோல் கழிவுப் பொருட்கள், ரப்பர், களிமண், தேங்காய்நார், பனங்கொட்டை, சிமெண்ட், மரம் எனப் பல பொருட்களில் சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

புடைப்புச் சிற்பங்கள் கல், மரம், உலோகம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டுள்ளன. மரத்தில் செதுக்கு வேலைகளைச் செய்வது இலகுவாக இருப்பதால் காலத்தால் முந்தைய புடைப்புச் சிற்பங்கள் மரத்தால் ஆனவை. ஆனால் அவை இயற்கைச் சீற்றங்களையும், ஈரப்பதத்தையும் தாண்டி நிலைத்திருக்க வாய்ப்பில்லை. நமக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பழைய புடைப்புச் சிற்பங்கள் கல்லில் செதுக்கப்பட்டவையாக உள்ளன. .



www.LearnEngineering.in

## ஐம்பொன் சிலைகள்:

www.LearnEngineering.in

சில்ப சாஸ்திரம் முதலிய நூல்களில் பஞ்ச லோகம் பற்றியும் சிலை செய்யும் விதிமுறைகளும் கூறப்பட்டுள்ளன. (Copper, Silver, Gold,Zinc&Lead) **செம்பு,, வெள்ளி, தங்கம், துத்தம், ஈயம்** ஆகிய ஐந்து உலோகங்கள் மிக உயர்ந்தவை என்றும் இவை ஐந்தும் கலந்தது ஐம்பொன்சிலை/பஞ்சலோகம் என்றும் சிற்ப நூல்கள் கூறுகின்றன.

முதலில் தேவைப்படும் சிலைக்கான உருவம் மெழுகில் உருவாக்கப்படும். பின்னர் மணலை அம்மெழுகுச்சிலையின் மேல் பூசி வார்ப்பு செய்வர். அதன் கீழ்ப்பகுதியில் சிறுதுளை வைப்பர். மண் காய்ந்த பிறகு மெழுகை உருக்கி வெளியேற்றுவர். பின்னர் உருக்கிய ஐம்பொன்னை அத் துளை வழியே ஊற்றுவர். ஒரு நாள் கழிந்து அச் சிலையிலுள்ள பிசிறுகளை அறம் கொண்டு தேய்த்து நகாசு வேலை செய்வர். பின்னர் சிலைக்குக் கண் திறப்பர். ஆலயங்களில் உற்சவர் விக்ரகங்கள் இவ்வகையின.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in







www.LearnEngineering.in

## பழங்குடியினர் தயாரிக்கும் கைவினைப் பொருட்கள்:

www.LearnEngineering.in

மட்பாண்டம் செய்தல், மூங்கில் கூடை வனைதல், பாய் முடைதல், பட்டு நெசவு, பிரம்பு பின்னுதல், மண் பொம்மை தயாரித்தல், கோவில் நகைத் தொழில் எனப் பற்பல கைவினைப் பொருட்களைப் பண்டைத் தமிழர் செய்துள்ளனர்.

உடலில் பச்சை வண்ணத்தில் ஊசி கொண்டு குத்திப் பல்வேறு வடிவங்களை வரைந்து அழகு படுத்திக் கொள்வது பச்சை குத்துதல் எனப்படும். குறவர் இனத்தைச் சேர்ந்தோர் இத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொம்பர் இன மக்கள் மூங்கிலினால் உருவாக்கப்பட்ட பொருட்கள், மரச் சீப்புகள், மாட்டுக் கொம்பு மான் கொம்பினால் ஆன கலைப் பொருட்கள் செய்வர். இறந்து போன காட்டு எருமைகளின் கொம்புகள் மற்றும் எலும்புகளைச் சேகரித்துப் பக்குவப்படுத்தி கலைப் பொருட்களைச் செய்தனர்.


பாணர் என்போர் முகமூடிகளை உருவாக்கினர். புராண மாந்தர்கள், தெய்வங்கள், விலங்குகள் போன்ற முகமூடிகள் தசரா விழாக்களில் பெரிதும் பயன்பட்டன.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in








www.LearnEngineering.in

www.LearnEngineering.in

## பொம்மைகள்:

மரப் பொம்மை, மரப் பாவை, மரப்பாச்சி எனப் பல பெயர்கள். மரத்தினால் மிக நேர்த்தியாகப் பல வடிவங்களில் அரசர் முதல் ஆண்டி வரை பற்பல பொம்மைகள் செய்யப்பட்டன. புராணம், கதை இவைகளை விளக்கும் வகையில் இப் பொம்மைகள் உருவாக்கப்படும்.

## தேர் செய்யும் கலை:

தேர் செய்யும் கலையில் தமிழன் பண்டைக் காலத்திலேயே தேர்ச்சியும் மதி நுட்பமும் பெற்றிருந்தான். மரத்தினால் தேர் செய்ததோடு கல்லிலும் தேர் செய்துள்ளான். பல்லவர்களின் மாமல்லபுர ஒற்றைக்கல் ரதங்கள், பாண்டியர்களின் கழுகு மலை ரதங்கள் இதற்குச் சான்றாகும். சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் தேர்கள் இருந்தமையினை அறிய முடிகிறது. நெடுந்தேர், பொற்றேர், கொடித்தேர், அணிகொள்தேர், கொடிஞ்சி நெடுந்தேர் எனப் பல பெயர்களில் இவை சுட்டப்பட்டுள்ளன.

நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட சக்கரங்களைக் கொண்டவை. இவற்றின் மூன்று பக்கங்களிலும் இறையுருவங்களும் புராணக் கதைத் தொகுதிகளைக் காட்டும் சிற்பத் தொகுதிகளும் மிருகங்கள் செடி கொடி மரங்கள் ஆகியவற்றின் உருவங்களும் ஆங்காங்கே பக்தர்கள் கொடையாளிகள் அரசர்கள் வீரர்கள் உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கும்.


www.LearnEngineering.in

www.LearnEngineering.in





www.LearnEngineering.in


www.LearnEngineering.in



www.LearnEngineering.in

www.LearnEngineering.in



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

கோயில்களில் திருவிழாக் காலங்களில் இறையுருவங்களை வீதி உலாவிற்கு எடுத்துச் செல்வதற்காக அதற்குத் தொடர்பான வாகனங்கள் மரத்தினால் செய்யப்பட்டன

**சுடுமண் சிற்பங்கள்**:

தமிழகத்தில் உலோகச் சிற்பங்களுக்கு முன்பிருந்தே சுடுமண் சிற்பங்கள் செய்யப்பட்டு வந்துள்ளன. சிந்து சமவெளியில் தோண்டி எடுக்கப்பட்ட புதைபொருள் சின்னங்களில் சுடுமண் சிற்பங்கள் கிடைத்தள்ளன.

களி மண்ணால் சிற்பம்செய்து பக்குவமாக உலர வைத்துச் சூளை போன்ற முறையில் சுட்டெடத்தால் அது திடப்பட்டுவிடும். அவ்வாறு சுட்ட மண் சிற்பமே சுடுமண் சிற்பம் எனப்படுகிறது. இவை எளிதில் தேயாது, துரு ஏறாது. அவற்றில் தேவையான முறையில் வண்ணங்களைப் பூசுவர்.

தமிழகத்துக் கிராமங்களில் அய்யனார், மாரியம்மன், காளியம்மன், முத்தாலம்மன், கருப்பசாமி, பைரவர், முனியப்பன், மதுரை வீரன், கோட்டைசாமி கோயில்களில் சுடுமண் பொம்மைகள் ஏராளமாக வைக்கப்பட்டுள்ளன.

இன்று அலங்காரப் பொருளாக அழகு செய்யும் வகையில் இச் சிற்பங்கள் பயன்படுத்தப் படுகின்றன. குறிப்பாக ஒப்பனை மிகுந்த குதிரைச் சிற்பங்கள், கலை நுட்பம் மிகுந்த ஜாடிகள், விளக்குகள், பானைகள் முதலியவற்றை இன்றும் காண முடிகிறது.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in









www.LearnEngineering.in

www.LearnEngineering.in

**நாட்டுப்புறத் தெய்வங்கள்** :

நாட்டுப்புற மக்களான கிராம மக்கள் வழிபடுகின்ற தெய்வங்களே நாட்டுப்புறத் தெய்வங்கள் எனச் சுட்டப்படுகிறது. இத் தெய்வங்களை நாட்டார தெய்வங்கள் என்றும் சிறு தெய்வங்கள் என்றும் காவல் தெய்வங்கள் என்றும் கூறுகின்றனர்.இத் தெய்வங்களின் வழிபாடு பெருந்தெய்வங்களின் வழிபாடு போல் அல்லாமல் முற்றிலும் மாறுபட்டிருக்கும். இதனைச் சிறு தெய்வ வழிபாடு என்பர். சிறு தெய்வ வழிபாடு அல்லது நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு பெரும்பாலும் தமிழ் தெலுங்கு பேசும் மக்கள்ால் பின்பற்றப்படுகிறது...

**வீட்டுத் தெய்வ வழிபாடு**: வாழ்ந்து மறைந்தவர்களையோ அல்லது வீட்டில் இருந்த மூதாதையர்களையோ அல்லது விபத்தினால் இறந்த கன்னிப் பெண்களையோ வணங்கும் வழக்கம். :

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

**குல தெய்வ வழிபாடு**:

நடுகல் வழிபாடே காலப்போக்கில் குலதெய்வ வழிபாடாக மாறியது என்பர். இரத்த உறவுடைய பங்காளிகள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர். தன் குலத்தின் முன்னே ணார்களில் சிறந்து விளங்கியவர்களை, குல மக்களுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களைத் தெய்வமாகப் பாவித்து வணங்குதல்.

**ஊர்த் தெய்வ வழிப்டாடு**:

ஊர் மக்களைக் காக்கும் தெய்வங்களை வணங்குதல், பெரும்பாலும் காவல் தெய்வங்களே ஊர்த் தெய்வங்களாக வணங்கப்படும்.


**இனத் தெய்வ வழிபாடு**: பல்வேறு குழவினைச் சார்ந்தவர்கள் ஓர இனமாக நின்று வணங்கும் முறை

**வெகு சனத் தெய்வ வழிபாடு**:

சாதி மதம் இனம் என்ற வேறுபாடுகளைக் கடந்த தெய்வ வழிபாடு.சமயபுரம் மாரியம்மன் வெக்காளியம்மன் அய்யனார் போன்ற தெய்வ வழிபாடுகள் முதலில் சிறு தெய்வ வழிபாடாக இருந்து வெகுசனத் தெய்வ வழிபாடாக மாற்றம் கொண்டன என்பர்.


www.LearnEngineering.in

இந்தத் தெய்வ வழிபாட்டு முறையில் பொதுவான இலக்கணங்களோ, வரைமுறைகளோ வகுக்கப்படவில்லை. ஆவை காலம் காலமாக முன்னோர்களர்ல் செய்யப்படுகின்ற சடங்குகளை அடிப்படையாக வைத்தே பின்பற்றப்படுகின்றன.




www.LearnEngineering.in

www.LearnEngineering.in










www.LearnEngineering.in

**குமரி முனையில் திருவள்ளுவர் சிலை:** குமரிக் கடல் நடுவே நீர் மட்டத்திலிருந்து 30அடி உயரமுள்ள பாறை மீது அமைந்த 133 அடி உயரச் சிலை தெய்வப்புலவன் திருவள்ளுவர் சிலையாகும். இச் சிலை அமைக்கும் பணி 1996 செப்டம்பர் 6 இல் தொடங்கப்பட்டு 2000 ஆண்டு சனவரி முதல் நாள் திறக்கப்பட்டது.

சிலை மற்றும் பீடத்தின் மொத்த உயரம் 133அடி.(41மீட்டர்).. இச்சிலை அமைந்துள்ள பீடம் 38அடி உயரம். இது அறத்துப்பாலின் 38அதிகாரங்களைக் குறிக்கிறது. திருவள்ளுவரின் சிற்பம் 95அடி (பொருட்பால் 70அதிகாரம் + இன்பத்துப்பால் 25 அதிகாரமங்களைக் குறித்தது.). 7000டன் எடை கொண்டது. இச்சிலை மிகப்பெரிய 3681 கற்களால் வடிவமைக்கப்பட்டது. இந்தச் சிலையை டாக்டர் கணபதி ஸ்தபதி வடிவமைத்தார்..



www.LearnEngineering.in
www.LearnEngineering.in

www.LearnEngineering.in

**இசைக் கருவிகள்: (**மிருதங்கம் பறை வீணை யாழ் நாதஸ்வரம்**)**

தமிழர்களுக்கு இசை என்பது உயிரும் உடம்பும் போன்றது . துமிழர்களின் வாழ்க்கையில் ஒரு தாய் கருவுற்றால் நலுங்குப் பாடல், குழந்தை பிறந்ததும் தாலாட்டுப் பாடல், சிறு வயதில் நிலாப்ப்ர்டல், இளமையில் காதல் பாடல், திருமணத்திற்குத் திருமணப் பாடல், மரணமடைந்தால் ஒப்பாரிப் பாடல் எனப் பிறப்பு முதல் இறப்பு வரை இசை ஒன்றி இருந்திருக்கின்றது.

பண்களை இசைக்கத் தகுந்தவற்றைப் பண்ணிசைக் கருவிகள் என்றும் தாளத்தைப் பொருத்தமாகக் குறித்துச் சுவையுடன் ஒலிக்கும் கருவிகளைத் தாளக் கருவிகள் என்றும் குறிப்பர். இசையெழுப்பும் வாயில்களைக் கொண்டு இசைக் கருவிகளை தோல் கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சகக் கருவிகள் என்றும் குறிப்பிடுவர்.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in




www.LearnEngineering.in

www.LearnEngineering.in




அறிவோமா தொன்மைத் தமிழை? *(Heritage of Tamil Language and Culture )*

www.LearnEngineering.in

www.LearnEngineering.in







www.LearnEngineering.in

www.LearnEngineering.in

**மிருதங்கம்**: மிருதங்கம் அல்லது தண்ணுமை என்பது தென்னிந்தியாவில் பயன்படுத்தப்படும் ஒரு தாள வாத்தியமாகும். கர்நாடக இசை நிகழ்ச்சிகளில் குறிப்பாக வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகளில் இடம்பெறும் இசைக்கருவி இதுவாகும். மதங்கம் என்னும் பழந்தமிழ்ச் சொல்லின் திரிபே மிருதங்கம் என்னும் வடமொழிச்சொல் என்பர். மெது என்பதே மிருது எனத் திரிந்தது.

இது பலாமரக் குற்றியைக் குடைந்து இக்கருவி செய்யப்படுகிறது. இதனை ராஜ வாத்தியம் என்றும் அழைப்பர். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் மராட்டியர் ஆட்சியில் மிருதங்கம் தமிழகத்துக்குள் நுழைந்தது.

**பறை**: மிகப் தொன்மையான தோற்கருவியாகும். தொல்காப்பியர் குறிப்பிடும் திணைக்குரிய கருப்பொருள்களில் பறையும் ஒன்றாகும். தோலால் போர்த்தப்பட்ட கருவியாகும். வாரால் விசித்து இறுகக் கட்டப்பட்டதாகும். குறந்தடி கொண்டு பறையடித்து ஒலி எழுப்புவர். வயலில் வேலை செய்யும் உழவர்கள் ஊக்கம் பெற மருதப்பறை, நெல்லறுக்கும் பொழுது அரிப்பறை, ஆறலைக் கள்வர் வழிப்பறி செய்யும் பொழுது கொட்டு, மதம் பிடித்த யானையின் வருகையை அறிவிக்க ஒலிப்பது, கழைக் கூத்தாடுபவர் களத்தின் கண் முழங்குவது, செய்தி அறிவிக்க முழங்குவது என பல வகைகளில் பயன்படுத்தப்படுவது.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

**வீணை**: இசைக்கருவிகளின் அரசி எனும் வீணை மிகச் சிறந்த நரம்புக் கருவியாகும். இப்பொழுது வழக்கத்திலுள்ள வீணையைத் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர் இரகுநாத நாயக்கர் பதினேழாம் நூற்றாண்டில் உருவாக்கியது. இதனால் இரகுநாத வீணை என்றும் தஞ்சை வீணை என்றும் அழைக்கப்படுகிறது.

வலது கையின் ஆள் காட்டி விரலும் நடுவிரலும் கம்பிகளை மீட்டுவதற்கும் இடது கையின் ஆள் காட்டி விரலும் நடுவிரலும் இசைப்பதற்கும் பயன்படுத்தப்படும். துாள சுருதித் தந்திகள் வலது கை சுண்டு விரலால் மீட்டப்படும். குடம், மேற்பலகை, தண்டு, சுரைக்காய், பிரடைகள், யானி முகம், மேளச் சட்டம், மெழுகுச் சட்டம், 24 மெட்டுக்கள் போன்ற பாகங்களைக் கொண்டதாய் பலாமரத்தார் செய்யப்படும்.

**யாழ்**: யாழ் என்பது பண்டைய இசைக்கருவிகளில் மிகச் சிறப்பு வாய்ந்தது. இது நரம்புகளால் கட்டப்பட்டது (யாக்கப்பட்டது) என்பதால் இப்பெயர். **தமிழர் வாசித்த முதல் இசைக் கருவி இதுவே**. நரம்புக் கருவிகளின் வளர்ச்சிக்குக் காரணமான ஆதி கருவி இதுவே. முற்றிலுமாக இது மறைந்து இதன் வழிவந்த வீணை முதன்மையா உள்ளது.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயிலில் யாழ் இசைக்கும் சிற்பம் உள்ளது. இது கி.பி எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. வில்லே வில்யாழாக மலர்ந்தது. பண்டைய இலக்கியங்கள் பலவற்றிலும் காப்பியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் யாழ் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. பேரியாழ், சீறியாழ், மகரயாழ், சகோடயாழ் எனப் பல வகைகள் இருந்ததாகச் சுட்டப்படினும் அதன் வடிவினை அறிய முடியவில்லை. பல ஆலயங்களில் இதன் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. யாழினை இசைப்பதற்கென்றே பாணர் என்ற குழு இருந்ததை இலக்கியங்கள் சுட்டியுள்ளன.

**நாதஸ்வரம்**:: இது துளைக்கருவி. இது நாதசுவரம், நாதசுரம், நாகசுரம், நாயனம், நாகஸ்வரம் என்று பலவாறு அழைக்கப்படுகிறது.
தென்னிந்தியாவில் இது மங்கலமான இசைக்கருவியாகக் கருதப்படுவதனால், இது எல்லா வகையான நன் நிகழ்வுகளிலும் இதற்கு ஓர் இடம் உண்டு. நூகூர் நாகப்பட்டிணத்தைச் சார்ந்த நாக சர்ப்பத்தைத் தெய்வமாகப் பூசித்த நாகர் என்ற சாதியினரால் வாசிக்கப்பட்டது. நாகம் போன்ற வடிவமைப்பு கொண்டது. இனிமையான நாதம் காரணம் என இதன் பெயருக்கான காரணம் கூறுவர்.

பல்லாண்டுகளாக நீளம் குறைந்த திமிரி என்ற நாகசுவரமே வாசிக்கப்பட்டது, நாகசுவர மேதை அறிமுகப்படுத்திய நீண்ட நாதசுவரமே இப்பொழுது வழக்கி:லுள்ளது. இதனைப் பற்றிப் பண்டைய இலக்கியங்களில் எவ்விதக் குறிப்பும் இல்லை.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

வட்ட வடிவ விரிந்த அணைசு, உள் கூடான நீண்ட மரக்குழல், உடலின் மேற் பொருத்தப்படும் கெண்டை, அவ்வப்போது செருகி இசைக்கப்படும் சீவாளி இதன் உறுப்புகள். உடலின் மேற்பாகத்தில் 12துளைகள். மேலிருந்து வரும் 7 துளைகளும் இசைப்பதற்கு ஏற்றவை. மற்றையதை மெழுகால் அடைத்தும் திறந்தும் தேவைக்கேற்ப செய்து கொள்வர். இதன் நீளம் 2.5அடி.

இதன் சுருதி கருவியாக விளங்குவது ஒத்து. இதிலிருந்து ஆதார சுருதி மட்டும்தான் வரும். நாதசுவரத்திற்கு தாளக் கருவியாக அமைவது தவில் என்ற தோற்கருவி. நாதசுவரக் கலைஞர், ஒத்து வாசிப்பவர், தவில் வாசிப்பவர், தாளக் கலைஞர்(ஜால்ரா) ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்த இசைக் குழவைப் பெரிய மேளம் என்றழைப்பர். நாதசுவரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படும். உயிர்க் காற்று என்று பொருள் படும் ஜீவ வளி என்பதே சீவாளி எனப்படுகிறது. உடலாகிய நாதசுவரத்திற்கு காற்றின் மூலம் உயிர் கொடுக்கும் சீவாளி நாணல் புல் வகையால் செய்யப்படும். கொறுக்குத் தட்டை என்றும் இதனைக் குறிப்பர்.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

## தமிழர்களின் சமூக, பொருளாதார வாழவில் கோவில்களின் பங்கு:

இறைவன் வாழுமிடம்/ வீற்றிருக்குமிடம் என்னும் பொருள் தரும் கோ+இல் என்பதே கோயில் /கோவில் எனக் குறிக்கப்படுகிறது. ஆன்மா லயப்படுகின்ற இடம் எனப் பொருள் தரும் ஆலயம் என்றும் சுட்டப்படுகிறது. தமிழகத்தை ஆண்ட அரச மரபினர் தத்தம் ஆட்சிக் காலத்தில் எண்ணற்ற ஆலயங்களை நிர்மாணித்தனர், சீரமைத்தனர். இக் கோயில்கள் அனைத்துமே இன்றும் சிறப்பான தமிழர் பெருமையைப் பறைசாற்றுகின்றன. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாட்டியக் கலை என்ற அனைத்துக் கலை வளர்ச்சிக்கும் ஆலயங்களே நிலைக்களன்களாக இருந்துள்ளன.

தமிழகத்தில் 36,488 கோயில்கள் இருப்பதாக அறநிலையத் துறைப் பதிவு குறிக்கிறது. சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்களைச் சார்ந்த ஆலயங்கள் அரசர்களால் தோற்றுவிக்கப்பட்டு நிலை பெற்றுள்ளன. இவை பெரும்பாலும் கற்களால் நிர்மாணிக்கப் பட்டதால் இயற்றகைச் சீற்றங்களைத் தாண்டி பல நூற்றாண்டுகளாக நிலைத்துள்ளன. சமணம், பௌத்த குகைக் கோயில்கள், பள்ளிகள் பல்லவர் காலத்திலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. புகழ்பெற்ற கிறித்துவ தேவாலயங்களும் முகமதிய மசூதிகளும் நிலைத்துள்ளன.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# வணக்கம்

# தமிழர் மரபு

## அலகு - 3

## நாட்டுப்புறக் கலைகள் மற்றும் விளையாட்டுகள்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# நாட்டுப்புறவியல்

- நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட கலைகளையும் நம்பிக்கைகளையும் வாய்மொழி இலக்கியங்களையும் புராணங்களையும் பழக்கவழக்கங்களையும் பற்றி அறிவியல் முறைப்படி ஆய்வது 'நாட்டுப்புறவியல்'.
- நாட்டுப்புறவியலைக் குறிக்கும் 'Folklore' என்ற சொல் **1846**ஆம் ஆண்டு **வில்லியம் ஜான் தாமஸ்** (W.J.Thomas) என்பவரால் உருவாக்கப்பட்டது.

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# நாட்டுப்புறவியல் FolkLore

## நாட்டுப்புற இலக்கியம் (Folk Literature)

1. நாட்டுப்புறப் பாடல்கள் (Folk Songs)
2. நாட்டுப்புறக் கதைகள் (Folk Tales)
3. நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் (Folk Ballads)
4. பழமொழிகள் (Proverbs)
5. விடுகதைகள் (Riddles)
6. புராணங்கள் (Myths)

## நாட்டுப்புறக்கலை, நம்பிக்கைகள் (Folk Arts, Beliefs Etc.)

1. நாட்டுப்புறக் கலைகள் (Folk Arts)
2. நாட்டுப்புறக் கைவினைப் பொருட்கள் (Folk Crafts)
3. நாட்டுப்புற நம்பிக்கைகள் (Folk Beliefs)
4. நாட்டுப்புற பழக்க வழக்கங்கள் (Folk Customs and Habits)
5. நாட்டுப்புறத் தெய்வங்கள் (Folk Gods)
6. நாட்டுப்புற விளையாட்டுகள் (Folk Games)
7. நாட்டுப்புற மருத்துவம் (Folk Medicine)

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# கலை : சொற்பொருள் விளக்கம்

**தற்காலத் தமிழ் அகராதி**

பார்ப்பவர் கேட்பவர் முதலியோர் மனத்தில் அழகுணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் (அந்தந்தப் பண்பாட்டுச் சூழலில்) வெளிப்படுத்துவது கலை



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# நாட்டுப்புறக் கலைகள்

- இயல்பாகத் தோன்றி இயற்கையோடு இணைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்பவை நாட்டுப்புறக் கலைகள்.
- **வளர்ச்சி நிலைகள் (3)**

    1. தொன்மைக் கலை (Primitive Art)
    2. நாட்டுப்புறக் கலை (Folk Art)
    3. செம்மைக் கலை (Classical Art)

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# நாட்டுப்புறக் கலைகள்

**1. சமூக மற்றும் வீரக் கலைகள் (Social and Martial Arts)**

அ) தற்காப்புக் கலை (Self-Defence Art)

ஆ) திறமை காட்டும் கலை (Efficiency Art)

**2. சமயம் சார் கலைகள் (Religious Arts)**

அ) வழிபாட்டுக் கலைகள் (Worshipping Arts)

ஆ) நேர்த்திக் கடன் கலைகள் (Consecration Arts)

இ) புராணங்களை எடுத்தியம்பும் கலைகள் (Legends Depicitings)

**3. தொழிற்சார் கலைகள் (Occupational Arts)**

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# நாட்டுப்புறக் கலைகளின் வகைகள்

- நாட்டுப்புறக் கலைகள் மக்களின் ஐம்புலன்களை ஈர்த்து மக்களது கவலையைப் போக்கும் செல்வம்
- இதை இரு வகையாக பகுக்கலாம்

**அ) நிகழ்த்துக் கலைகள்**

**ஆ) நிகழ்த்தாக் கலைகள்**

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# 1. நிகழ்த்துக் கலைகள் (Performing Arts)

- ஒருவரோ ஒரு குழுவினரோ பிறருக்காகப் பாடுவது, ஆடுவது, இசைப்பது, நடிப்பது ஆகியவை நிகழ்த்துக் கலைகள்.
- கும்மி, கோலாட்டம், கரகாட்டம்






www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# 2. நிகழ்த்தாக் கலைகள் (Material Arts)

- மக்கள் முன் நேரடியாக நிகழ்த்தாமல் வீட்டிலேயே செய்து எடுத்து வந்து காட்சிபடுத்தப்படுபவை நிகழ்த்தாக் கலைகள்.
- பச்சைமண், உலோகத்தால் செய்யப்படும் சிலைகள், பொம்மைகள், நகைகளில் கை வேலைப்பாடுகள், கோயில் தேர், கூடை, பாய்.




www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# கூத்து

நாடகக் கதைமாந்தர்கள் மூலம் மக்களுக்கு நேரடியாகச் சமூகக் கருத்துகள், வரலாறுகள், இதிகாசங்கள், புராணங்கள் முதலானவற்றை எடுத்துரைக்கும் ஊடகம் கூத்து.



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

- கூத்தர், பொருநர், விறலியர், கோடியர்
- தெருக்கூத்து, கழைக்கூத்து, பாவைக்கூத்து என மூவகைப்படும்.
- பின்னிரவில் தொடங்கி விடியும் வரை நடைபெறும்.





www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# கரகாட்டம்

- கரகம் - கமண்டலம், ஆலங்கட்டி, பூங்குடம், நீர்த்துளிகங்கை
- ஒன்பது வகையான களங்கள். தொடக்க நிலை, வேக நிலை, அதிவேக நிலை
- சக்திக்கரகம், ஆட்டக்கரகம்



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# வில்லுப்பாட்டு

- வில்லுப்பாட்டின் தாயகம் குமரி, நெல்லை மாவட்டங்கள்.
- வில்பாட்டு, வில்லடிப்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு
- வில், உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகியவை வில்லுப்பாட்டின் உறுப்பு இசைக்கருவிகள்
- பம்பை, உறுமி, தக்கை, தந்துபி ஆகியவை பக்கக் கருவிகள்



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# கணியான் கூத்து

- கணியான் எனும் சமூகப் பிரிவினர் பெண் வேடமிட்டு ஆடும் ஆட்டம்.
- கணியான் ஆட்டம், கணியான் கூத்து, மகுட ஆட்டம்
- தலைமைப் பாடகர் ஒருவர், பெண் வேடதாரி இருவர், மகுடம் வாசிப்பவர் மூவர், தாளம் ஒருவர் - ஏழு பேர்



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# ஒயிலாட்டம்

- ஆண்கள் வெள்ளை ஆடையில் தலையில் முண்டாசும் கழுத்தில் பூமாலையும் காலில் சலங்கையும் அணிந்து கையில் பல வண்ணங்களில் கைக்குட்டையும் வைத்து ஆடுவது.
- அடிப்படை ஆட்டங்கள் பதின்மூன்று.



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# தோற்பாவைக் கூத்து

- **தமிழ்க் கலைக் களஞ்சியம்**

சிறுதோல் பதுமைகளை ஒரு விளக்குக்கும் ஒரு வெள்ளைச்சீலைத் திரைக்கும் நடுவே வைத்து ஆட்டி அவற்றின் நிழல் திரையில் விழும்படிச் செய்தல்

- இக்கூத்து நிகழ்த்துவதற்கு ஆறுபேர் தேவை




www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# சிலம்பாட்டம்

- கையில் உள்ள கம்பை வீசி ஒளி எழுப்பி ஆடும் ஆட்டம்
- கம்பு வீசும் திறன், காலடி எடுத்து வைக்கும் முறை, வேகமாக வீசும் திறன் ஆகியவை சிலம்பத்தின் அடிப்படைகள்
- வீரத்தின் அடிப்படையில் தோன்றியது



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# வளரி

- வளைஎறி என்று அழைக்கப்படும் வளரி தமிழரின் தொன்மையான ஆயதம்.
- வீரத்தின் குறியீடு; விசையின் குறியீடு
- ஓர் இரும்புத் துண்டு காற்றில் சுழன்று இலக்கை நோக்கிச் சென்று தாக்கி எய்தவரிடமே திரும்பி வருவது வளரி.




www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# புலியாட்டம்

- புலி போல் வேடம் அணிந்தவரும் வேட்டைக்காரர் போல் வேடம் அணிந்தவரும் சேர்ந்து ஆடும் ஆட்டம்.
- இதில் ஆடலும் இசையும் கலந்திருக்கும்.



www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# நாட்டுப்புற விளையாட்டுகள்

- நாட்டுப்புற அமைப்புடைய ஆட்டம்
- போட்டியை ஏற்படுத்துபவை
- வெற்றியை நிர்ணயிக்கும் விதிகளைக் கொண்டவை
- ஏற்றுக்கொள்ளத்தக்க விதிகளைக் கொண்டவை
- குழு மனப்பான்மையைத் தோற்றுவிப்பவை





www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# நாட்டுப்புற விளையாட்டுகள்

- சடுகுடு
- பதினைந்தாம் புலி
- தாயம்
- பல்லாங்குழி





www.LearnEngineering.in

www.LearnEngineering.in

- தட்டாங்கல்
- கண்ணாமூச்சி
- கிட்டிபுள்
- பம்பரம்






www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# நாட்டுப்புற விளையாட்டுகள்

- பட்டம் விடுதல்
- கரகர வண்டி
- கள்ளன் போலீஸ்
- கால்தாண்டி விளையாட்டு





www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# நாட்டுப்புற விளையாட்டுகளின் பொது நன்மைகள்

- பொழுதுபோக்கு நேரத்தை உடல்நலம் சார்ந்தவையாக உருவாக்குகின்றன.
- பதினைந்தாம் புலி, தாயம் போன்ற விளையாட்டுகள் அறிவுக்கூர்மையை அதிகரிக்கின்றன.
- சடுகுடு விளையாட்டு - தீண்டாமைக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட தமிழ்ச் சான்றோர்களின் சிந்தனை வெளிப்பாடு.
- பல்லாங்குழி - இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு வழங்குதல் (உபரிப் பகர்தல்)

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

- நாட்டுப்புறக் கலைகள் மக்களின் உளவியல் அழுத்தங்களைக் குறைத்துக் கொள்ளவும் புத்தாக்க உணர்வை வளர்த்துக் கொள்ளவும் உதவுகின்றன.
- ஒரு சிற்றூரில் இருக்கும் அனைவரும் வேற்றுமைகளை மறந்து, அடுத்தடுத்த தலைமுறைக்குத் தங்களது அன்பையும் தொடர்பையும் கடத்துவதற்கு நாட்டுப்புற விளையாட்டுகள் அடிப்படையாக அமைகின்றன.

**நன்றி!**

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

வணக்கம்

# தமிழர் மரபு

## அலகு – 4

## தமிழர்களின் திணைக்கோட்பாடுகள்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# திணைக் கோட்பாடு

- ஆதியில் குடியிருப்பைக் குறித்த இச்சொல் காலப்போக்கில் ηசாற்பொருள் மாறுதல் அடைந்து குடியிருப்பில் உள்ள மக்களின் ஒழுக்க வடிவங்களைச் சுட்டுவதாக மாறியுள்ளது.
- சங்க கால மக்கள் எவ்வாறு ஒரு வரன்முறையோடு திணை முறையிலான வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளனர் என்பதைத் திணை கோட்பாடுகள் உணர்த்துகின்றன.
- திணை என்பதன் பொருள்> இடம்> ஒழுக்கம்> குடி> குலம்> பொருள் - **கழகத் தமிழ் அகராதி**

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# தமிழகத்தின் தாவரங்கள்

- குறிஞ்சி - அகில் வேங்கை
- முல்லை - கொன்றை காயா
- மருதம் - காஞ்சி மருதம்
- நெய்தல் - புன்னை ஞாழல்
- பாலை - இலுப்பை பாலை

# தமிழகத்தின் விலங்குகள்

- குறிஞ்சி - புலி> கரடி> சிங்கம்
- முல்லை - முயல்> மான்> புலி
- மருதம் - எருமை> நீர்நாய்
- நெய்தல் - முதலை> சுறா
- பாலை - வலியிழந்த யானை

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# தமிழகத்தின் பறவைகள்

- குறிஞ்சி - கிளி> மயில்
- முல்லை - காட்டுக்கோழி> மயில்
- மருதம் - நாரை> நீர்க்கோழி> அன்னம்
- நெய்தல் - கடற்காகம்
- பாலை - பருந்து

www.LearnEngineering.in

# சங்க இலக்கியத்தில் அகக்கோட்பாடுகள்

www.LearnEngineering.in

அக வாழ்க்கைக்கு முதல் கரு உரி என முப்பொருள்களை வரையறை செய்துள்ளார் தொல்காப்பியர்.

- குறிஞ்சி
  மலையும் மலை சார்ந்த இடமும்
- முல்லை
  காடும் காடு சார்ந்த இடமும்
- மருதம்
  வயலும் வயல் சார்ந்த இடமும்
- நெய்தல்
  கடலும் கடல் சார்ந்த இடமும்
- பாலை
  மணலும் மணல் சார்ந்த இடமும்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# பொழுதுகள்

## அ) சிறுபொழுது

- குறிஞ்சி - யாமம்
- முல்லை - மாலை
- மருதம் - வைகறை
- நெய்தல் - எற்பாடு
- பாலை - நண்பகல்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# பொழுதுகள்

## ஆ) பெரும்பொழுது

- குறிஞ்சி
  கூதிர் முன்பனி
- முல்லை
  கார்காலம்
- மருதம்
  பெரும்பொழுதுகள் ஆறும்
- நெய்டதல்
  பெரும்பொழுதுகள் ஆறும்
- பாலை
  ,sNtdpy;. KJNtdpy; gpd;gdp

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# உரிப்பொருள்

- **குறிஞ்சி**

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் (தலைவன் தலைவி சந்திப்பு)

- **முல்லை**

இருத்தலும் இருத்தல் நிமித்தமும் (கடமை மேற்சென்ற தலைவன் வரும் வரை தலைவி ஆற்றியிருத்தல்)

- **மருதம்**

ஊடலும் ஊடல் நிமித்தமும் (பரத்தையர் பிரிவு மேற்கொள்ள தலைவன் தலைவி இடையே ஏற்படும் ஊடல்)

- **நெய்தல்**

இரங்கலும் இரங்கல் நிமித்தமும் (பிரிந்து சென்ற தலைவன் வரவுக்காக தலைவி இரங்குதல்)

- **பாலை**

பிரிதலும் பிரிதல் நிமித்தமும் (தலைவன் பொருளீட்டுவதற்காக தலைவியைப் பிரிந்து செல்தல்)

www.LearnEngineering.in

# புறத்திணை

www.LearnEngineering.in

பழந்தமிழர்களின் வாழ்வியலின் வீரம்> அரசியல் தொடர்பான வாழ்வு புற வாழ்வு எனப்படுகின்றது. புறவாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கம் புறப்பொருள் ஆகும்.

| அகம் | புறம் | புறத்திணை விளக்கம் |
|---|---|---|
| குறிஞ்சி | வெட்சி | பசுக்கூட்டங்களைக் கவர்தல் மற்றும் மீட்டல் |
| முல்லை | வஞ்சி | போரிட செல்தலும் அதனை எதிர்கொள்தலும் |
| மருதம் | உழிஞை | மதில் முற்றுகையும் மதில் காத்தலும் |
| நெய்தல் | தும்பை | அதிரப் பொருதலும் விடாது போர் செய்தலும் |
| பாலை | வாகை | வெற்றியை உரைத்தல் |
| பெருந்தி ணை | காஞ்சி | நிலையாமை பற்றிக் கூறுதல் |
| கைக்கிளை | பாடாண் | தலைவன் சிறப்புகளை உரைத்தல் |

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# அகத்திணை கோட்பாடுகள்

- எட்டுத்தொகை> பத்துப்பாட்டு பாடல்கள்
- அகம் – களவு> கற்பு
- தலைமக்கள் பெயர் சுட்டப்படாது
- அறத்தொடு நிற்றல்> வரைவு கடாதல்> இற்செறிவு> மடல்ஏறுதல்> உடன்போக்கு முதலான வாழ்வியல் செய்திகள்
- ஊடல் தீர்க்கும் வாயில்கள் (11)

செவிலி நற்றாய் தோழி பாங்கன்…

- உள்ளுறை உவமம்> இறைச்சி முதலான அகப்பதிவுகள்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# புறத்திணைக் கோட்பாடுகள்

- போர் செய்யும்பொழுது வீரர்கள் அந்தந்த திணைக்கேற்ப அடையாள மலர்களைச் சூடியிருப்பர்.
- போர் செய்வதற்குக் கால வரையறைகள் உண்டு. போர் நிகழும் காலம் தவிர பிற சமயங்களில் வீரர்கள் தம்முள் சண்டையிடுவதில்லை.
- போர்ப் பாசறையில் இரு தரப்பு வீரர்களுக்கும் பாகுபாடின்றி உணவு அளித்தல்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

- புறமுதுகிட்டவர்கள்> சரணடைந்தவர்கள்> ஆயுதத்தைத் தவறவிட்டவர்கள் முதலானவரைத் தாக்கக்கூடாது.
- மார்பில் ஏற்படும் காயம் விழுப்புண் என்றும் புறமுதுகில் ஏற்படுவது புறப்புண் என்றும் வழங்கப்படும்
- இறந்த வீரர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் நடுகல் வழிபாடு

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# தமிழர்கள் போற்றிய அறக்கோட்பாடு

- அறம்

  மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதி
- மனித வாழ்வின் உயர்மதிப்பீடான விழுமியங்களை உருவாக்குவது.
- தனிமனித அறம்
- தாம் வளம்பட வாழ்தல்
- தம் கேளீரைத் தாங்குதல்
- இரப்போர்க்கு இல்லை என்னாது ஈதல்
- நீதிநூல்கள்
- வள்ளுவனின் அறம்

  மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# தமிழகத்தில் கல்வி நிலை

- கற்றலின் சிறப்பு

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே** - ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்> புறநானூறு

- புலவர்களுக்கு மதிப்பு

**அவனை அவர் பாடியது**

இங்கு அவன் என்பது மன்னனையும் அவர் என்பது புலவரையும் குறிக்கின்றது.

- தொல்காப்பியம்

**ஓதற் பிரிவு ஒருமூன்று டைத்து**

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# பதினெண்கீழ்க்கணக்கு

## அ) நாலடியார்

- கல்வி கரையில கற்பவர் நாள்சில
- கடைநிலத்தில் பிறந்தவர் எனினும்

கற்றறிந்தவரைத் தலைநிலத்து வைப்பர்

## ஆ) நான்மணிக்கடிகை

- கற்றலின் வாய்த்தப் பிறப்பில்லை
- தனக்குப்பாழ் கற்றறிவில்லா உடம்பு
- கல்லாது மூத்தானை கைவிட்டுக் கற்றவன்

இளமை பாராட்டும் உலகு

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

## இனியவை நாற்பது

பிச்சை புக்காயினும் கற்றல் மிகஇனிதே

## பழமொழி

குலவிச்சை கல்லாமல் பாகம்படும்

## திருக்குறள்

கல்வியின் சிறப்பை உணர்த்தும் வகையில் திருவள்ளுவர் இந்நூலில் கல்வி எனும் தலைப்பில் ஒரு அதிகாரமே வகுத்துள்ளார்.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# சங்ககால நகரங்கள்> துறைமுகங்கள்

அ) சேரன் – வஞ்சி

முசிறி> தொண்டி

ஆ) சோழன் – உறைA+ர்

காவிரிப்G+ம்பட்டினம் (G+ம்புகார்)

இ) பாண்டியன் – மதுரை

கொற்கை> தொண்டி

ஈ) பல்லவன் – காஞ்சி

மாமல்லபுரம்

## பிற முக்கிய நகரங்கள்

- நல்லியக்கோடன் - கிடங்கில் (திண்டிவனம்)
- இளந்திரையன் - திருவெஃகா (காஞ்சிபுரம்)

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# சங்க காலத்தில் வாணிகம்

- தேவைகளின் அடிப்படையில் நெய்தல் நிலத்தில் வாணிகம் தொடங்கியது.
- தமிழ்நாட்டின் பெரும்பகுதி கடலுக்கு அருகில் உள்ளது.
- கடற்கரை மாவட்டங்களில் வாழ்பவர்கள் **பரதவர்** அல்லது **கடலோடிகள்** எனப்பட்டனர்.
- தமிழ்நாட்டில் பிறநாட்டவர் உள்ளத்தைக் கவரும் **முத்து> பவளம்> ஆரம்> அகில்> வெண்துகில்> சங்கு> மிளகு** முதலான பல பொருட்கள் இருந்தன.

**யவனர் தந்த வினைமான் நன்கலம்**

**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**

- யவனர் – கிரேக்கர் ரோமானியர் அராபியர்

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

- பெரிய மரக்கலங்களில் பண்டங்களை ஏற்றி வந்ததை **மதுரைக்காஞ்சி**யும் **பட்டினப்பாலை**யும் (81-83) குறிப்பிடுகின்றது.

**பொன்மலிந்த விழுப்பண்டம்**

**நாடார நன்கிளிதரும்**

**ஆடியர் பெருநாவாய்**

- மலையில் பெய்த நீர் கடலில் சேர்வது போலவும் வானில் முகந்த நீர் மலையில் பொழிவதுபோலவும் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகம் நடைபெற்றது.




www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# பண்டையத் தமிழரின் அயலக தொடர்புகள்

- திரைகடல் ஓடியும் திரவியம் தேடு - **மூதுரை.**
- பாபிலோனியா> கிரேக்கம்> ரோம்> எகிப்து> சுமேரியா முதலான நாடுகளோடு பழந்தமிழர்கள் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.
- இத்தொடர்பால் பல தமிழ்ச் சொற்கள் பிற நாடுகளில் வழங்கி வருவதைக் காணலாம்.
- தமிழ் பிறமொழிகள்

| தமிழ் | பிறமொழிகள் |
| --- | --- |
| கூலி | Coolie |
| அரிசி | ரைஸ் |
| இஞ்சி | ஜிஞ்சிஃபர் |

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# சோழர்களின் வெற்றி

- மாமன்னன் முதலாம் இராசராசன் மற்றும் இராசேந்திர சோழன் காலத்தில் தமிழரின் பெருமைகள் உலகளவில் விரிந்தன.
- உத்தம சோழனுக்குப் பின் இராசராசன் (கி.பி 985-1014) அரியணை ஏறினான்.
- கேரளம்> சிங்களம்> கொல்லம்> கொடுங்கோளுர்> பாண்டியநாடு> குடநாடு அல்லது குடமலை முதலான பகுதிகளைக் கைப்பற்றிய பெருமைக்குரியவன்.
- இராசராச சோழனின் மகன் இராசேந்திர சோழன் கடாரம் வரை படையெடுத்து சென்று வெற்றி பெற்றான்.

www.LearnEngineering.in

# இராசராசன் ஏற்றுக் கொண்ட விருதுகள்

www.LearnEngineering.in

- மும்முடிச்சோழன் சோழமார்த்தாண்டன்
- செயங்கொண்டான்
- பாண்டிய குலாசனி
- கேரளாந்தகன்
- சிங்களாந்தகன்
- தெலிங்க குலாகலன்


நன்றி!

www.LearnEngineering.in

www.LearnEngineering.in

www.LearnEngineering.in


# சோழரின் வணிகப் பரப்பு




www.LearnEngineering.in

www.LearnEngineering.in

# சோழரின் ஆட்சிப் பரப்பு




www.LearnEngineering.in

www.LearnEngineering.in